## மெட்ரோ ரெயிலில்

# மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.2500

## எத்தனைமுறை வேண்டுமானாலும் பயணம் செய்யலாம்!

சென்னை, மார்ச், 16—

சென்னை நகரை நவீனப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்டதுதான் மெட்ரோ திட்டம்.பல்வேறு கட்டங்களை கடந்து இன்று சென்னையின் பல்வேறு முக்கிய இடங்களை இணைக்கும் பணியில் மெட்ரோ ரெயில் சேவை முக்கிய பங்காற்றி வருகிறது. இதில் பயணம் செய்பவர்களுக்கு ஒரு மாதம் அளவில்லா பயணத்திற்கான பாஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை ரூபாய் 2500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 50 வைப்புத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியதாவது:—அதிகாரிகள் சுற்றுலா பயணிகள் வியாபார தொழிலதிபர்கள் என பலதரப்பட்ட மக்களும் இந்த திட்டத்தின் மூலம் பயன் அடைவார்கள். தற்போது தினசரி பயணம் செய்வதற்கான ரூபாய் 100 மதிப்பிலான அட்டை திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

இந்த புதிய திட்டத்தின் மூலம் ரூபாய் 2500 ரூபாய் கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் இதன் மூலம் 45 கிலோமீட்டர் தொலைவு கொண்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் செய்து கொள்ளலாம் , இந்தத் திட்டம் ஒரு நபர் 30 நாட்கள் அளவற்றபயணம் செய்து கொள்ள ஏற்படுத்தப்பட்டதாகும். மேலும் சென்னை மெட்ரோ நிர்வாகம் சார்பில் 10 சதவீதம் 20 சதவீத தள்ளுபடி வழங்கும்ஸ்மார்ட்கார்டுபோன்றதிட்டங்களும்ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவலின் படி மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்யும் பயணிகளின் 30 சதவீதம் பேர் ஸ்மார்ட் கார்டுகளையும் 30 சதவீதம் பேர் கார்டுகள் திட்டத்தையும் மூலம் பயன் பெறுகின்றனர் ஆனால் 40 சதவீதம் பேர் தினசரி டோக்கன் வாங்கி தான் பயணம் செய்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்